# குளித்தலை நகராட்சி

10.12.2021.ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.ப.சுப்புராம் அவர்களின் நவம்பர்–2021.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர்–2021.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03 குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான நாப்பாளையம் மற்றும் பெரியார்நகரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், நீர் உறிஞ்சும் கிணறுகள் சம்பந்தமான பம்பிங் அறை, மோட்டார் அறை மற்றும் பம்பிங் அறைக்கு செல்லும் பாலம் தூண்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதை சரிசெய்யவும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மராமத்துப் பணிகள் செய்வதற்கும், 15வது நிதிக்குழு மான்யம் 2021–2022ஆம் ஆண்டு நிதியில் 50% குடிநீர் பணிகளுக்கும், 50% திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கும் செலவு மேற்கொள்ள வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கியதன்பேரில், கீழ்க்கண்ட விவரப்படியான பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1) | பம்பிங் அறைகள் மற்றும் பாலம், தூண்கள் பணிகள் | 15.00 |
| 2) | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பழுதுபார்ப்பு பணிகள் | 15.00 |
| | மொத்தம் | 30.00 |

மேற்கண்ட பணிகள் செய்வதற்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டில் பணிகள் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1845/2021/இ1)

..2..

பொருள்– 04. குளித்தலை நகராட்சியில் சத்தியமங்கலம் உரக்கிடங்கில் Vermi Compost Yard உள்ள தொட்டிகள் உடைந்து மேற்படி பணிகள் செய்ய இயலாத நிலையில் உள்ளது. இதனை உடனடியாக மாற்றம் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, 15வது நிதிக்குழு மான்யம் 2021–2022ஆம் ஆண்டு நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் 15% திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளும், 50% குடிநீர் சம்பந்தமான பணிகளும் செய்வதற்கு வழிகாட்டு நெறிமுறைகள் கூறியதின்பேரில், கீழ்க்கண்ட பணிசெய்ய உத்தேசிக்கப்பட்டு மதிப்பீடு ரூ.30.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, இப்பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களிடம் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1) | நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் உரக்கிடங்கு Vermi Compost Yard மராமத்து பணிகள் செய்தல் | 30.00 |

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). 15.வது நிதிக்குழு மான்யம் 2021–2022 நிதியிலிருந்து பணி செய்யவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1845/2021/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் உள்ள கழிப்பிடங்கள் மற்றும் குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள், குடிநீரில் கலந்து விநியோகம் செய்யப்படும் குளோரின் திரவம் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 15வது நிதிக்குழு மான்யம் 2020–2021ஆம் ஆண்டு Tied Grand திட்டத்தின்மூலம் 50% தொகைக்கு திடக்கழிவு பணிகள் செய்வதற்கும், 50% தொகைக்கு குடிநீர் பணிகள் செய்வதற்கும் நெறிமுறைகள் வழங்கியுள்ளதால், அதன் அடிப்படையில் பணிகள் எடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணிகள் விபரம் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1) | குடிநீர் விநியோகம் செய்வதற்கான குளோரின் திரவம் கொள்முதல் | ரூ. 4.75 இலட்சம் |
| 2) | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விடுபட்ட இடங்களில் குடிநீர் விநியோக குழாய்கள் அமைத்தல் | ரூ. 19.00 இலட்சம் |
| 3) | மின்கல வாகனங்கள் (BOV) 14 எண்ணிக்கையில் மராமத்து பணிகள் | ரூ. 3.75 இலட்சம் |
| 4) | வார்டு எண்.16ல் ஏற்கனவே உள்ள கழிப்பிடம் மராமத்து பணிகள் | ரூ. 5.00 இலட்சம் |
| 5) | வார்டு எண்.19ல் ஏற்கனவே உள்ள கழிப்பிடம் மராமத்து பணிகள் | ரூ. 5.00 இலட்சம் |
| 6) | வார்டு எண்.7ல் ஏற்கனவே உள்ள கழிப்பிடம் மராமத்து பணிகள் | ரூ. 5.00 இலட்சம் |
| 7) | கடம்பர்கோவில் மற்றும் காவல்காரத்தெருவில் உள்ள கழிப்பிடங்கள் மராமத்து பணிகள் | ரூ. 5.00 இலட்சம் |
| | மொத்தம் | ரூ. 47.50 இலட்சம் |

மேற்கண்ட விவரப்படியான பணிகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினையும், மேற்கண்ட தொகைக்கு பணிகள் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1).அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணிகள் 15வது நிதிக்குழு மான்ய நியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1845/2021/இ1)

பொருள்–06. தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 (Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016) விதி 5, துணை விதி (1) ன் மூலம் குளித்தலை நகராட்சியின், கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி மின்னணு சேவை விநியோக (Electronic Service Delivery System) அமைப்பின் கீழ் https://tnurbanepay.tn.gov.in/ என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது.

| வ. எண். | மின்னணு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர் | | | சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி |
|---|---|---|---|---|
| (1) | (2) | | | (3) |
| 1 | குடிநீர் கட்டணம்<br>Water Charge | i | புதிய குடிநீர் இணைப்பு<br>New Water Connection | நகராட்சி ஆணையர் |
| | | ii | புதிய குடிநீர் இணைப்புக்கான கட்டணம்<br>Payment for New Water Supply Connection | |
| 2 | தடையின்மை சான்றுக்கான விண்ணப்பம்<br>Apply for NOC/ Clearance | i | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம்<br>Application for movie shooting | |
| | | ii | குடிநீர் இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br>NOC for Water Connection (Industrial) | |
| | | iii | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br>Movie Shooting Payment | |
| | | iv | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br>NOC for Movie Shooting | |
| 3 | சுகாதார சான்றிதழ்<br>Sanitary Certificate | i | சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate | |
| 4 | கட்டிட அனுமதி<br>Building Plan | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம்<br>Building Plan Work Progress | |
| | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணிமுன்னேற்ற அறிக்கை<br>Building Plan Work Progress last story | |
| | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br>Complete report for Tax Assessment | |
| | | iv | மனைப்பிரிவு அங்கீகாரகட்டணம்<br>Layout Approval Payment | |
| | | v | மனைப்பிரிவு அங்கீகாரம் கோருதல்<br>Layout Approval Request | |
| | | vi | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு<br>Notice for Commencement Work | |
| | | vii | கட்டிடம் இடிக்க அனுமதி<br>Permission for Demolition for Building | |
| | | viii | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமகட்டணம்<br>Planning Permission with Building License Payment | |
| | | ix | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (12 மீட்டருக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below12 mts) | |
| | | x | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (1200 சதுர அடிக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below 1200 Sq.ft) | |
| | | xi | தொழில் வல்லுநர் / டெவலப்பர்களின் பதிவு<br>Registration of Professionals/Developers | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | xii | தொழில் வல்லுநர் / டெவலப்பர்கள் சான்றிதழ் பதிவு<br>Registration of Professional/Developers Certificate | நகராட்சி ஆணையர் |
| | | xiii | கட்டிட வரைப்படம் புதுப்பித்தல் கோரிக்கை<br>Renewal Building Plan Request | |
| | | xiv | கட்டிட வரைப்படம் புதுப்பித்தல் கட்டணம்<br>Renewal Building Plan Payment | |
| | | xv | தொழில் வல்லுநர் / டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு<br>Renewal Registration of Professional/Developer | |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை<br>Request for machinery License | |
| 5 | வர்த்தக உரிமம்<br>Trade License | i | தொழில் உரிமம்பதிவு – தேடல்<br>Trade Registration – Search | |
| | | ii | தொழில் உரிமம் புதுப்பித்தல் – தேடல்<br>Trade Renewal – Search | |
| 6 | சொத்துவரி<br>Property Tax | i | வரிவிதிப்பு முழுவிவரம்<br>View Assessment History | |
| | | ii | வரிவிதிப்பு விவரம் காண<br>View Assessment | |
| 7 | தொழில்வரி<br>Professional Tax | i | புதிய தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை<br>New Assessment request | |
| | | ii | தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை சமர்ப்பிப்பு<br>Return Submission | |
| 8 | பிறப்பு மற்றும் இறப்பு<br>Birth & Death | i | எனது சான்றிதழ்<br>My Certificate | |
| 9 | சாலை துண்டிப்பு<br>Road Cutting | i | சாலை துண்டிப்பு அனுமதி<br>Road Cutting Permission | |
| | | ii | சாலை துண்டிப்பு கட்டணம்<br>Road Cutting Payment | |

மேற்கண்ட விபரத்தினை கரூர் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடு செய்யவும், அதற்குரிய செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1835/2021/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சிப் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.36.43 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 30.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சிப் பகுதியில் உள்ள மண் சாலைகளை பேவர் பிளாக் சாலையாக மேம்படுத்தும் பணி. | திரு.R.A.குழந்தைவேல்,<br>10/4,வாகைக்குளம், மணப்பாறை. | 4.87 % above |
| | | திரு.R.N.வெங்கடாஜலபதி,<br>2/20,சௌண்டீஸ்வரிஅம்மன் கோவில்தெரு, குளித்தலை. | 5.00% above |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விகிதத்திற்கு திரு.R.A.குழந்தைவேல், ஒப்பந்ததாரர் 4.87% கூடுதலாகவும், திரு.R.N.வெங்கடாஜலபதி, 5.00% கூடுதலாகவும் கொடுத்து உள்ளனர். இவர்களில் குறைவான கூடுதல் குறிப்பிட்டுள்ள திரு.R.A.குழந்தைவேல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். திட்டப்பணி என்பதாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டியதாலும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1501/2021/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சிப் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.135.60 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 30.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சிப் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி (மண் சாலை உள்ள இடங்களில் தார் சாலை அமைத்தல்) | திரு.R.A.குழந்தைவேல், 10/4,வாகைக்குளம், மணப்பாறை. | 4.88 % above |
| | | திரு.R.N.வெங்கடாஜலபதி, 2/20,சௌண்டீஸ்வரிஅம்மன் கோவில்தெரு, குளித்தலை. | 5.66% above |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டு விகிதத்திற்கு திரு.R.A.குழந்தைவேல், ஒப்பந்ததாரர் 4.88% கூடுதலாகவும், திரு.R.N.வெங்கடாஜலபதி, 5.66% கூடுதலாகவும் கொடுத்து உள்ளனர். இவர்களில் குறைவான கூடுதல் குறிப்பிட்டுள்ள திரு.R.A.குழந்தைவேல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். திட்டப்பணி என்பதாலும், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டியதாலும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1501/2021/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பெரியார்நகர் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு, காவேரி ஆற்றில் அமைந்துள்ள தலைமை குடிநீர் கிணறு மூலம் தண்ணீர் சேகரிக்கப்படுகிறது. மேற்கண்ட குடிநீர் கிணறு மற்றும் அதற்கான நடைபாலம் 2002ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். இந்நிலையில் தற்போது பெய்த மழையினால் காவேரி ஆற்றில் தண்ணீர் அதிகமாக வருகிறது. இதன் காரணமாக பாலத்தின் வழியாக தண்ணீர் வேகமாக சென்றதால் பாலத்தின் தூண்கள் மற்றும் கிணற்றின் சுற்றுசுவரும் சற்று சாய்ந்த நிலையில் உள்ளது. எனவே, பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் விநியோகப் பணியில் சிரமம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டும், பாதுகாப்பினை கருத்தில் கொண்டும், தண்ணீர் உறிஞ்சும் கிணறு மற்றும் பாலத்தின் தூண்கள் அருகில் தடுப்புசுவர் அமைத்து பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1,10,00,000/–க்கு (ரூபாய் ஒரு கோடியே பத்து லட்சம் மட்டும்) பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் வழியாக, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து, இந்நகராட்சியின் நிதியிலையினை கருத்தில் கொண்டு, மேற்கண்ட தொகையினை முழு மான்யத்துடன் நிதி ஆதாரம் வழங்குவதற்கும், பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கக்கோரியும் கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1945/2021/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சிப் பகுதியில் விநியோகம் செய்யப்படும் குடிநீரில் பொதுமக்களின் நலன் கருதி திரவ குளோரின் கலந்த குடிநீர் விநியோகம் செய்வது மிகவும் முக்கியமான ஒன்றாக கருதப்பட்டு கடந்த காலங்களில் இருந்து இன்றைய தேதிவரை குளோரின் கலந்து மட்டுமே குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து வழங்க வேண்டியதன் அவசியம் கருதி ஓராண்டுக்கு தேவைப்படும் அளவு சுமார் 40000–லிட்டர் (நாற்பதாயிரம் லிட்டர் மட்டும்) வாங்குவதற்கு உத்தேச செலவினத் தொகை ரூ.7,60,000/–க்கு (ரூபாய் ஏழு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை 2021–2022 நிதியாண்டு குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண.1098/2020/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு மின்விளக்குகள் பழுது நீக்கி எரிய விடுவதற்கு தேவையான மின்சார சாமான்கள் அலுவலக இருப்பில் இல்லாத காரணத்தினால் தெருவிளக்குகள் பொதுமக்களுக்கு சரியான நேரத்தில் பழுது சரிபார்ப்பு சரிசெய்துதர முடியவில்லை. தெருவிளக்கு தொடர்பான புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இந்த குறைபாடுகளை உடனடியாக சரிசெய்ய மின்சார சாமான்கள் அதிகம் தேவைப்படுகிறது. எனவே, அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகள் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.7.00 லட்சத்திற்கு (ரூபாய் ஏழு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2021–2022ம் நிதி ஆண்டில் பொது நிதியில் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1894/2021/இ1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நெ.4 குடிநீர் கைப்பம்புகளில் சில பழுதடைந்து உள்ளன. மேற்படி கைப் பம்புகளை சரிசெய்வதற்கு அலுவலக இருப்பில் பொருட்கள் இல்லாத காரணத்தினால், குடிநீர் தேவைகள் பொதுமக்களுக்கு சரியான நேரத்தில் செய்ய இயலாமல் உள்ளது. மேலும், பொதுக்கழிப்பிடம் மற்றும் குடிநீர் தொட்டிகளில் உள்ள குழாய்கள் பழுது ஏற்பட்டு தண்ணீர் கசிந்துகொண்டு வீட்டு இணைப்புகளில் சரியாக தண்ணீர் வருவதில்லை. இந்த குறைபாடுகளை உடனடியாக சரிசெய்யவும், பொதுமக்களிடம் புகார்கள் வந்ததை சரிசெய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட பணிகள் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட பணிகளுக்கு செய்யப்படும் செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1850/2021/இ1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சிப் பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு, உலகையே உலுக்கிவரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு விழிப்புணர்வு மற்றும் இதர விளம்பரங்களை செய்வதற்கு தேவையான ஒலிபெருக்கி மற்றும் இதர பொருட்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/–க்கு (ரூபாய் இருபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.463/2021/எச்1)

பொருள்– 14. குளித்தலை நகராட்சியில் காசோலை வழியாக கையாடல் நடைபெற்றதாக தணிக்கை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன்பேரில், வருவாய் உதவியாளர் திரு.கி.சரவணன் என்பவரை தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது. அன்னார் தனது தற்காலிக பணிநீக்கத்தை ரத்துசெய்யக்கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் WP.No.23325/2021.இல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கை நடத்தித்தர திரு.லூர்துபவுல்மௌரியா, நகராட்சி நிலைக்குழு வழக்கறிஞர், சென்னை அவர்களுக்கு வழக்காடு கட்டணம் ரூ.15,000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.941/2020/சி1.

பொருள்– 15. குளித்தலை நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TN-47-E-1522 என்ற வாகனத்திற்கான தகுதி சான்று பெற வேண்டி, பழுது பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில், காந்தி மோட்டார்ஸ், ஈரோடு என்ற நிறுவனத்தின்மூலம் பணி மேற்கொள்ள குளித்தலை நகராட்சி மன்ற தீர்மானம் எண்.215, நாள்–30.06.2021ல் அனுமதியளிக்கப் பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்தின் பழுதுகள் நீக்கம் மற்றும் தகுதி சான்று பெற்ற வகையில் செலவினத் தொகை ரூ.1,44,400/– ஆகும். மேலும், இவ்வாகனத்திற்கான கூடுதல் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் பின்னேற்பு கோருவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.651/2021/எச்1)

*******

<u>குளித்தலை நகராட்சி</u>

10.12.2021.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 273 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 274 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 275 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 276 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 5 | 5 | 277 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 6 | 6 | 278 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 279 | ஏற்கப்பட்டது. |
| 8 | 8 | 280 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 9 | 9 | 281 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 282 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 11 | 11 | 283 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 12 | 12 | 284 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 285 | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 286 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 15 | 15 | 287 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/—ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.